



## ரூ.55 லட்சம் கோடியை ஜி.எஸ்.டி. வரியாக தமிழ்நாட்டு மக்கள் கட்டி இருக்கிறார்கள்! பா.ஜ.க.வின்

# ஜி.எஸ்.டி. வரிக் குறைப்பு நாடகத்தை தமிழ்நாட்டு மக்கள் ஒருநாளும் நம்ப மாட்டார்கள்!

### சென்னை கிழக்கு மாவட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை,செப்.28-**

**சென்னை கிழக்கு மாவட்டக்கழகம் சார்பில், வேப்பேரியில் ஏற்பாடு செய்யப்பட்ட ‘முன்னேற்றப்பாதையில் முப்பெரும் விழா’ நலத்திட்ட நிகழ்ச்சிகளில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**விழாவில் கழக மூத்த முன்னோடிகள் - கழகத்துக்காக உழைத்த உடன்பிறப்புகளின் குடும்பத்தார் - சுய உதவிக்குழுச் சகோதரிகள் - மாணவச்செல்வங்கள் - நேசத்துக்குரிய திருநர்கள் என சுமார் 1000 பேருக்கு நிதி உதவி உட்பட பல்வேறு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.**

**அப்போது அவர், ``பா.ஜ.க. அரசு ஜி.எஸ்.டி-வரியைக் குறைக்கிறோம் என்று சொல்லி, நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாடகத்தை தமிழ்நாட்டு மக்கள் ஒரு நாளும் நம்பமாட்டார்கள்” என்று அவர் குறிப்பிட்டார்.**

**விழாவில் துணை முதல்வர் ஆற்றிய உரை வருமாறு:**

‘முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழா’ நலத்திட்ட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் உள்ளபடியே, உளமார மகிழ்ச்சி அடைகிறேன். நேற்று கல்வித் திருவிழா, இன்றைக்கு நம் குடும்பத் திருவிழா என்று அண்ணன் சேகர்பாபு அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். உண்மைதான். நம் முதலமைச்சர் அவர்கள், மாணவச் செல்வங்களின் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை விளக்கும் ஒரு மிகச்சிறந்த நிகழ்ச்சி, நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. எனக்குத் தெரிந்து தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித்துறை வரலாற்றிலேயே, இதுபோல நெகிழ்ச்சியான நிகழ்ச்சி நடந்ததே கிடையாது.

### குடும்பத் திருவிழா

நம் திட்டங்களை எல்லாம் பாராட்ட தெலங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள், வந்து, கலந்துகொண்டு அவர் மிகவும் நெகிழ்ச்சி அடைந்துவிட்டார். அந்த நிகழ்ச்சியை நேற்று முடித்துவிட்டு, நாம் இன்று நம் குடும்பத் திருவிழாவாக பல்வேறு நலத்திட்டங்களைக் கொடுக்கிறோம். திருநங்கைகள், மகளிர் சுயஉதவிக்குழு, கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் மற்றும் மாணவர்களுக்கு நலத்திட்டங்களை இன்று நாம் வழங்குகிறோம். காலையில், விளையாட்டுத்துறையின் சார்பாக, கிட்டத்தட்ட 850 விளையாட்டு வீரர்களுக்குப் பாராட்டு விழாவை நடத்தி, அவர்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் சார்பாக உயரிய ஊக்கத்தொகையாக 22 கோடி ரூபாயை அளித்துள்ளோம்.

இந்த நிகழ்ச்சியில் கழகத்திற்காக உழைத்த, மறைந்த உடன்பிறப்புகளின் குடும்பத்தினரையும் மறக்காமல், அவர்களுக்கும் அண்ணன் சேகர்பாபு அவர்கள் நலத்திட்ட உதவிகளைக் கொடுத்து இருக்கிறார். காலையிலிருந்து எங்கு சென்றாலும், கடைசியில் தங்குவதற்கு வீட்டிற்குதான் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதுபோல் நான் கடந்த மூன்று நாட்களாக மதுரை, விருதுநகர் மாவட்டத்துக்குச் சென்று, கடைசியாக இந்த சென்னை கிழக்கு மாவட்டத்துக்குத்தான் வந்தாக வேண்டும். சென்னை கிழக்கு மாவட்டம் என்றால், எப்போதுமே தனிச்சிறப்புதான். அதற்குக் காரணம் உங்களின் மாவட்டக் கழகச் செயலாளர், தலைவர் அவர்களால் செயல்பாபு என்று தொடர்ந்து பாராட்டப்பட்ட, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்கள்தான். மற்ற மாவட்டச் செயலாளர்கள் எல்லாம் என்னிடம் தேதி வாங்குவார்கள், அண்ணன் சேகர்பாபு அவர்கள் மட்டும்தான் என்னிடம் தேதி கொடுப்பார். அந்த அளவுக்கு அவருக்கு என்னிடமும், எனக்கு அவரிடமும் உரிமை இருக்கிறது.

### பல்வேறு நிகழ்ச்சிகள்

கழகத்தின் முப்பெரும் விழாவை முன்னிட்டு தொடர்ந்து 13 நாட்களாக பல்வேறு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தியுள்ளார். இந்த 13 நாள் மட்டும் நிகழ்ச்சி நடத்தவில்லை. வருடத்தில் உள்ள 365 நாளும் நிகழச்சியை நடத்துபவர் அண்ணன் சேகர்பாபு அவர்கள். மற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் எல்லாம் முப்பெரும் விழா என்றால், 3 முதல் 10 நாட்கள் நடத்துவார்கள். ஆனால், ஒரு மாதம் முழுவதும் விழாவை நடத்துவது என்றால், அது அண்ணன் சேகர்பாபு அவர்களால் மட்டும்தான் முடியும்.

தலைவர் பிறந்தநாள், தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான், என் பிறந்தநாள், கலைஞர் பிறந்தநாள், நினைவு நாள் என அனைத்துக்கும் நிகழ்ச்சியை நடத்துபவர் அண்ணன் சேகர்பாபு அவர்கள். அப்படிப்பட்ட உழைப்பாளி அண்ணன் சேகர்பாபு அவர்கள். இன்றைக்கு இந்த மேடையில் நலத்திட்ட உதவிகளைக் கொடுக்கிறோம். தமிழ்நாட்டு மக்களுடன் என்றைக்கும் தோளோடு தோள் நிற்பது நம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை எல்லோரும் உணர்ந்திருப்பீர்கள்.

என்னிடம் நம் கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள் தேதி கேட்கும்போது, உங்கள் மாவட்டத்துக்கு நான் வருகிறேன். எத்தனை நிகழ்ச்சிகள் வேண்டுமானாலும் நடத்துங்கள். ஆனால், என் மன திருப்திக்காக ஒரு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்று அவர்களிடம் ஒரு அன்புக் கட்டளை வைப்பேன். கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளை அழைத்து, அவர்களை கௌரவப்படுத்தி பொற்கிழி வழங்க வேண்டும் என்று உரிமையாகக் கேட்பேன். தமிழ்நாட்டில் உள்ள அத்தனை மாவட்டங்களுக்கும் சென்று, கழக மூத்த முன்னோடிகளை சந்தித்து, பொற்கிழி வழங்கி இருக்கிறேன். இந்த நிகழ்ச்சியில் அண்ணன் சேகர்பாபு அவர்கள் நான் கேட்காமலேயே கழக மூத்த முன்னோடிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளார்.

இன்றைக்கு 1,000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறோம் என்றால் 1,000 குடும்பங்களுக்கு நாம் விளக்கேற்றி வைக்கிறோம் என்று அர்த்தம். கழகம் சார்பாக இந்த நிகழ்ச்சி என்றால், நம் அரசு சார்பாக நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். இப்போது நாம் அடித்துச் சொல்லலாம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளிலும் நிச்சயம் ஒருவராவது நம் அரசின் திட்டங்களால் பயனடைந்திருப்பார்கள். அதில் சில திட்டங்களை மட்டும், குறிப்பிட விரும்புகிறேன்.

### வாழ்த்தி அனுப்புகிறார்கள்

நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இட்ட ஐந்து கையெழுத்துகளில் முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணம் திட்டத்துக்குதான். இந்த நான்கரை ஆண்டுகளில் மகளிர் விடியல் பயண திட்டத்தில் 780 கோடி பயணங்களை, மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். நாமெல்லாம் ஒரு திட்டத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை, மகளிரிடம் கற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் இந்தத் திட்டத்தின் வெற்றி.

அடுத்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற பள்ளிக் குழந்தைகளுக்கு தரமான காலை உணவு வழங்கப்படுகிறது. பெற்றோர்கள் எல்லாம் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கு நம் முதலமைச்சர் இருக்கிறார் என்று வாழ்த்தி அனுப்புகிறார்கள். பள்ளிக்கூடத்துக்கு வந்தால், முதலில் தரமான உணவு, பிறகு தரமான கல்வி வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

நேற்று மாலை, தெலங்கானாவின் முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் `கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வந்தார். அவர் இந்தத் திட்டத்தைப்பற்றி கேள்விப்பட்டு, அடுத்த ஆண்டு முதல் தெலங்கானாவிலும் காலை உணவுத் திட்டத்தை அமல்படுத்தப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார். இந்தியாவில் உள்ள அத்தனை மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு இருக்கிறது. தமிழ்நாட்டு முதலமைச்சர் இந்தியாவிலேயே நம்பர்-1 முதலமைச்சராக, அனைத்து முதலமைச்சர்களுக்கும் முன்னுதாரணமாக இருந்து வருகிறார்கள் என்று தெலங்கானா, பஞ்சாப் முதலமைச்சர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

### உயர்கல்வி படிக்க

அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று தலைவர் உருவாக்கிய திட்டம் தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டங்கள். அரசுப் பள்ளியில் படித்த மாணவர்கள் எந்தக் கல்லூரியில் சென்று உயர்கல்வி படித்தாலும் அவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக, மாதம் 1,000 ரூபாய் அவர்களின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. வருடந்தோறும் 8 லட்சம் மாணவ, மாணவிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, உயர்கல்வி படிக்க செல்கின்ற மாணவர்களின் விகிதாச்சாரத்தில் (Gross Enrollment Ratio) இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடத்தில் உள்ளது. அதற்குக் காரணம் நம் தலைவர் கொண்டு வந்த தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டங்கள்தான்.

நமது அரசின் மிக மிக முக்கியமான திட்டம் என்றால், அது கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். இந்தத் திட்டத்தில் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். 2023 செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் ஆரம்பித்து கிட்டத்தட்ட 24 மாதங்களாக, 24 ஆயிரம் ரூபாயை, 1 கோடியே 20 லட்சம் மகளிருக்கு நம் தலைவர் அவர்கள் கொடுத்துள்ளார்கள்.

நான் தொடர்ந்து பல மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் செல்கிறேன். வாரத்தில், நான்கு ஐந்து நாட்கள் வெளியூரில்தான் இருக்கிறேன். சனிக்கிழமை மட்டும் வெளியே வருபவன் அல்ல. ஞாயிற்றுக்கிழமைகூட மக்கள் பணியில்தான் இருப்பேன். அப்படி, நான் பல மாவட்டங்களுக்குச் செல்லும்போது பொதுமக்கள், மகளிர் மனு கொடுப்பதற்காக நிற்பார்கள். வாகனத்தை நிறுத்தி, அவர்களின் மனுவை வாங்குவேன். துணை முதலமைச்சரானவுடன் இப்போது வாகனத்தில் மனு வைப்பதற்கு இடமில்லை. இருந்தாலும், வண்டியை நிறுத்தி, அவர்களிடம் பேசுவேன். கலைஞரின் உரிமைத்தொகையைப் பற்றி அவர்களிடம் கேட்பேன். 90 சதவிகிதம் பேர் என் மருத்துவச் செலவுக்காக பயன்படுத்துகிறேன் என்று சொல்வார்கள். எனது பேரன், பேத்திகளுக்கு நோட்டு புத்தகங்கள் வாங்க பயன்படுகிறது என்று சொல்வார்கள்.

### ‘உங்களுடன் ஸ்டாலின்’

சிலர் தங்களுக்கு வரவில்லை என்று சொல்வார்கள். `உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களை நம் அரசு நடத்தியது. அந்த முகாம்களில் 60 சதவிகிதம் பேர் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைக்குதான் விண்ணப்பித்துள்ளார்கள். தலைவர் அந்த திட்டத்திற்கான விதிமுறைகளைத் தளர்த்தி உள்ளார். இன்னும் இரண்டு மாதங்களில் கூடுதல் மகளிருக்கு, கலைஞர் உரிமைத்தொகையை தலைவர் அவர்கள் நிச்சயம் கொடுப்பார்.




இந்தத் திட்டத்தை எல்லாம் செயல்படுத்திய தைரியத்தில்தான் நம் தலைவர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பைத் தொடங்கினார். பொதுமக்களை அவர்கள் வீட்டுக்கே சென்று சந்தித்து, கழகத்தில் சேர்க்க வேண்டும் என்று சொன்னார். இன்றைக்கு கிட்டத்தட்ட 2 கோடியே 50 லட்சம் பேரை கழகத்தில் நாம் இணைத்திருக்கிறோம். ஆர்வத்துடன் நிறைய பேர் சேர்ந்திருக்கிறார்கள். நம் எழுச்சியை பார்த்து, மக்கள் வருகிற வேகத்தைப் பார்த்து, இன்றைக்கு சங்கிகள் கூட்டத்துக்கும், அடிமைக் கூட்டத்துக்கும் தூக்கம் போய்விட்டது.

குறிப்பாக, ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கு எப்படி எல்லாம் தொல்லை கொடுக்க முடியுமோ, ஒவ்வொன்றையும், ஒவ்வொரு நாளும் ரூம் போட்டு யோசித்து தொந்தரவு கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

### புதிதாக ஒரு நாடகம்

நமக்கு வர வேண்டிய நிதி உரிமையைத் தடுத்து நிறுத்துகிறார்கள். ஆனால், ஒரு வாரமாக புதிதாக ஒரு நாடகத்தை நடத்துகிறார்கள். ஜி.எஸ்.டி. வரியைக் குறைத்துவிட்டோம் என்று ஒன்றிய பா.ஜ.க அரசு நாடகம் ஆடுகிறது. இதில் என்ன கேவலம் என்றால், அ.தி.மு.க.-வும் சேர்ந்து அதற்கு ஜால்ரா அடித்துக்கொண்டு இருக்கிறது. நான் ஒன்றை மட்டும் கேட்கிறேன். ஜி.எஸ்.டி-யை குறைத்துவிட்டோம் என்று பெருமையாகப் பேசுகிறீர்களே? நான் கேட்கிறேன் இந்த ஜி.எஸ்.டி.யை எட்டு வருடத்துக்கு முன்பு ஏற்றியது யார்? ஏற்றிய நாளிலிருந்து இதை எதிர்த்துக் குரல் கொடுக்கக்கூடியது யார்?

பாதிக்கப்பட்டது தமிழ்நாட்டு மக்கள். கிட்டத்தட்ட 55 லட்சம் கோடி ரூபாயை நாம் ஜி.எஸ்.டி. வரியாக கட்டி இருக்கிறோம். அந்தப் பணத்தை திருப்பிக்கொடுக்கவில்லை. நமக்கு வரவேண்டிய கல்வி நிதியைக் கொடுக்கவில்லை. புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய 2,200 கோடியைக் கொடுப்பேன் என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் சொன்னார். அந்த புதிய கல்விக் கொள்கையின் மூலம் சமஸ்கிருதத்தை தமிழ்நாட்டுக்குள் எப்படியாவது திணிக்கப் பார்க்கிறார்கள். குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருவதுதான் புதிய கல்விக் கொள்கை. எப்படியாவது மூன்றாவது மொழியாக இந்தியை தமிழ்நாட்டுக்குள் திணிக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட திட்டம்தான் புதிய கல்விக் கொள்கை.

“புதிய கல்வி கொள்கை ஏற்றுக்கொண்டால்தான் 2,500 கோடி ரூபாய் கொடுப்பேன் என்று சொல்கிறாய். 2,500 கோடி இல்லை, நீ 10,000 கோடி ரூபாய் கொடுத்தாலும் தமிழ்நாட்டுக்குள் நான் புதிய கல்விக் கொள்கையை நுழைய விடமாட்டேன்” என்றுச் சொல்லி, பள்ளிக் கல்வித்துறையில் சாதனைகளைச் செய்து கொண்டிருப்பவர் நம் முதலமைச்சர் அவர்கள்.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஆக்சிஜன் என்று சொல்லப்படுகிற நிதி உரிமையைப் பறித்துவிட்டார்கள். மொழி உரிமையைப் பறிக்கப் பார்க்கிறார்கள். தொகுதி மறுவரையறையை கொண்டு வந்து தமிழ்நாட்டின் 39 நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைத்து அதை 32 தொகுதியாக குறைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சி செய்கிறது.

### மாநில உரிமைகள் பறிப்பு

எப்போதெல்லாம் நம் மாநில உரிமைகள் பறிக்கப்படுகிறதோ, அப்போதெல்லாம் இந்தியாவுக்கே வழிகாட்டியாக எதிர்த்துக் குரல் கொடுக்கக்கூடிய முதல் முதலமைச்சர் நம்முடைய கழகத் தலைவர் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கும் தெரிந்திருக்கிறது, ஒன்றிய பா.ஜ.க.-வுக்கும் தெரிந்திருக்கிறது. தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, நம்முடைய தலைவர் பீகாருக்கு சென்று, பீகார் மாநிலத்தின் உரிமைக்கும் குரல் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார். ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசு திருந்தியதாக இல்லை. ஜி.எஸ்.டி-யைக் குறைக்கிறோம் என்று சொல்லி ஒரு நாடகத்தை ஆடி இருக்கிறார்கள். இதற்கு பருத்தி மூட்டை குடோன்லயே இருந்திருக்கலாம். எட்டு ஆண்டுகளாக பொதுமக்கள், வணிகர்கள், அவ்வளவு பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். பா.ஜ.க. நடத்துகிற நாடகத்தை எல்லாம் மற்ற மாநிலக்காரர்கள் நம்புவார்கள். தமிழ்நாட்டு மக்கள் மிகவும் தெளிவானவர்கள். உங்களின் உருட்டல், மிரட்டலுக்கு எல்லாம் பயப்பட மாட்டார்கள். உங்களின் பொய்களையெல்லாம் ஒரு நாளும் தமிழ்நாட்டு மக்கள் நம்பவும் மாட்டார்கள்.

சங்கிகள் கூட்டம்தான் இப்படி இருக்கிறது என்றால் அடிமைக்கூட்டம் அதற்கு ஒரு படி மேல் பா.ஜ.க.-வோடு சேர்ந்து பேசுகிறார்கள். சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது, சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குக் காரணமே பா.ஜ.க.-தான். இனிமேல் ஜென்மத்துக்கும் பா.ஜ.க.-வுடன் கூட்டணியே இல்லை என்று அ.தி.மு.க. சொன்னது. ஆனால், இன்றைக்கு எங்களின் ஆட்சியைக் காப்பாற்றியது பா.ஜ.க.-தான். எனவே எப்பொழுதும் அதற்கு நன்றியோடு இருப்போம் என்று சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி அவர்கள். இன்றைக்கு மக்கள் அவரை எடப்பாடி பழனிசாமி என்று அழைப்பதில்லை. `முகமூடி பழனிசாமி’ என்ற ஒரு செல்லப்பெயர் வைத்திருக்கிறார்கள்.

எடப்பாடி பழனிசாமி நான் என்றைக்கும் பா.ஜ.க.-வுக்கு நன்றியாக இருப்பேன் என்றுச் சொல்கிறார். நன்றியைக் காட்டுவதற்கு யாராவது கார் மாறி மாறிப் போவார்களா? காரை மாற்றுவது அவருக்குப் புதிது கிடையாது. நம் தி.மு.க.-வின் தலைமை அலுவலகம் சென்னை அறிவாலயம். நமக்கு ஏதாவது ஒரு பிரச்னை என்றால் அறிவாலயத்துக்குச் சென்று மனு கொடுத்து தலைவரைப் பார்க்க முயற்சிப்போம். அதேபோல, அ.தி.மு.க-வின் தலைமை அலுவலகம் ராயப்பேட்டையில் இருக்கிறது என்று நாம் நினைத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால், அது ராயப்பேட்டையில் இல்லை, அமித் ஷாவின் வீட்டில் இருக்கிறது. அ.தி.மு.க. கட்சி மட்டும்தான் இங்கு இருக்கிறது. ரிமோட் கண்ட்ரோல் டெல்லியில் இருக்கிறது.

இன்றைக்கு நம் கழகத்தில் கிட்டத்தட்ட 25 அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி எனப் பல அணிகள் உள்ளன. ஆனால், நமக்குப் போட்டியாக இன்றைக்கு அ.தி.மு.க-விலும் பல அணிகள் இருக்கின்றன. இ.பி.எஸ். அணி, ஓ.பி.எஸ். அணி, டி.டி.வி. அணி, சசிகலா அணி, செங்கோட்டையன் அணி, ஜெ.தீபா அணி, ஜெ.தீபாவின் டிரைவர் அணி என பல அணிகள் அங்கும் இருக்கின்றன.

### அனைவரும் கலைஞர் அணி

புதிதாக பச்சை நிறப் பேருந்து, மஞ்சள் நிறப் பேருந்தை எடுத்துக்கொண்டு, பிரச்சாரம் செய்ய கிளம்பி இருக்கிறார்கள். நீங்கள் எந்தப் பேருந்தை எடுத்துச் சென்றாலும் கடைசியாக வெற்றி பெறப்போவது தமிழ்நாட்டு மகளிர் பயன்படுத்துகிற பிங்க் நிற பேருந்துதான். நிச்சயம் அனைத்து பேருந்துகளையும் பின் தள்ளச்செய்து, மகளிர் நம்மை வெற்றிபெற வைத்துவிடுவார்கள். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதே உணர்வுடன், எழுச்சியுடன் அடுத்த 6 மாத காலம் நாம் பயணிக்க வேண்டும். உங்களுக்கு இருக்கின்ற சின்ன சின்ன மனகசப்புகளை மறந்துவிட வேண்டும். நாம் இப்போது அனைவரும் கலைஞர் அணி. அடுத்த 6 மாதம் மக்களை அவர்களின் வீட்டுக்கே சென்று சந்திக்க வேண்டும்.

சில கட்சிகள் இப்போது புதிதாக வந்திருக்கிறது. கொள்கை என்றால் என்ன என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தி.மு.க.-வின் கொள்கையைப் பற்றி சொல்ல வேண்டும். இந்த மாநிலத்தின் உரிமைக்காக, நம் தமிழ் மொழிக்காக எவ்வளவு போராட்டம், உயிர்த் தியாகம் செய்திருக்கிறோம் என்பதை, இப்போது உள்ள இளைஞர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

மாணவர்கள், மாணவிகளிடம் பேச வேண்டும். ஏனென்றால், அவர்கள்தான் எந்தக் கொள்கையும் இல்லாமல் விசில் அடித்தோம், கிளம்பினோம் என்று இருக்கிறார்கள். நாம் வெறும் விசில் அடிக்கவும், கைத்தட்டவும் கூடிய கூட்டம் கிடையாது. நாம் கொள்கைக் கூட்டம். திராவிட முன்னேற்றக் கழகம் என்பது வெறும் தேர்தலுக்காகத் தொடங்கப்பட்ட இயக்கம் கிடையாது. மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும், மக்களின் உரிமைக்காகப் போராட வேண்டும் என்பதற்காக தொடங்கப்பட்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

தேர்தலுக்கு மட்டும் வெளியே சென்று மக்களைச் சந்திக்கும் இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. நம் தலைவரும் அப்படி கிடையாது. 60 வருட பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர் நம் கழகத் தலைவர் அவர்கள். இன்றைக்கு நம் தலைவருக்கு நிகராக தமிழ்நாட்டு அரசியலில் அல்ல, இந்திய அரசியலிலேயே இன்னொருவர் கிடையாது. அவ்வளவு போராட்டங்களையும், அடக்குமுறைகளையும் சந்தித்தவர் நம் தலைவர் அவர்கள்.

எடப்பாடி பழனிசாமி அவர்கள் அவரின் கட்சித் தலைவர் யார் என்பதையே மறந்துவிட்டார். எம்.ஜி.ஆர். அவர்களின் முகமே அவருக்கு மறந்துவிட்டது. எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்து வைத்துவிட்டு, பேரறிஞர் அண்ணாவின் சிலையைத் திறந்து வைத்துவிட்டேன் என்று பேசுகிறார். நேற்று தொலைக்காட்சியில் இந்தச் செய்தியெல்லாம் முதன்மைச் செய்தியாக வந்தது. கட்சியை மறந்துவிட்டார் என்று நினைத்தால், கட்சித் தலைவரையும் மறந்துவிட்டார். இப்போது அவருக்கு தெரிவதெல்லாம் அமித் ஷா முகம்தான்.

கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களை எல்லாம் பார்க்கும்போது எனக்கு மிகப் பெருமையாக இருக்கும். மற்ற எந்த இயக்கத்திலும் கட்சிக்காக உழைத்த மூத்த முன்னோடிகளை அழைத்து கௌரவிக்கிற பழக்கமே இல்லை. நம் தி.மு.க.-வில் மட்டும்தான் இது நடக்கும். அதே நேரத்தில் பொறாமையாகவும் இருக்கும். ஏனெனில், நான் கலைஞரை நேரில் பார்த்திருக்கிறேன். கலைஞருடன் கூட்டத்துக்கு, பிரச்சாரத்துக்கு சென்றிருக்கிறேன், அவரது பேச்சுகளை நேரில் கேட்டிருக்கிறேன். அதேபோல, பேராசிரியர் தாத்தாவின் கூட்டங்களுக்குச் சென்று, அவரை நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால், தந்தை பெரியார் அவர்களை நேரில் பார்த்தது கிடையாது. தொலைக்காட்சியில் அவரின் பேச்சுகளைப் பார்த்திருக்கிறேன், கேட்டிருக்கிறேன் அவரின் புத்தகங்களைப் படித்திருக்கிறேன். பேரறிஞர் அண்ணாவை நேரில் பார்த்தது கிடையாது.

### கழகத்தின் வரலாறு நீங்கள்

ஆனால், இங்கு வந்துள்ள உங்களில் பலபேர் பேரறிஞர் அண்ணாவின் பிரச்சாரத்துக்குச் சென்றிருப்பீர்கள், அவருடன் போராட்டம் நடத்தி சிறைக்குச் சென்றிருப்பீர்கள், தந்தை பெரியாரை நேரில் பார்த்து, அவரின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருப்பீர்கள். நான் உங்களை எல்லாம் தந்தை பெரியாரின் மறு உருவமாக, பேரறிஞர் அண்ணாவின் மறு உருவமாக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் மறு உருவமாக, இனமான பேராசிரியரின் மறு உருவமாகப் பார்க்கிறேன். நீங்கள்தான் கழகத்தின் வரலாறு. நீங்கள் இல்லமால் கலைஞரும், தலைவரும், திராவிட மாடல் அரசும் கிடையாது. அதற்குக் காரணமே நீங்கள்தான்.

மாவட்டச் செயலாளர் ஏற்பாட்டில், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக நான் உங்களுக்கு வழங்குகின்ற தொகையாக இதைப் பார்க்கவில்லை.

ஒரு பேரன் தன் சொந்த தாத்தா - பாட்டிக்கு செய்கிற கடமையாகத்தான் இதைப் பார்க்கிறேன். உங்களுக்கு பொற்கிழி, நலத்திட்டங்கள், சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் நிச்சயம் பெருமைதான். ஆனால், எனக்குத் தெரியும், இதையெல்லாம்விட நீங்கள் பெருமையாகக் கருதுவது, உங்கள் கழுத்தில் போட்டிருக்கிற கருப்பு-சிவப்பு துண்டு. அதைத்தான் பெருமையாக நீங்கள் கருதுவீர்கள்.

இங்கு வந்திருக்கிற அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து வருகிற 6 மாதங்கள் மிக மிக முக்கியமான காலகட்டம். இந்த சென்னை கிழக்கில் இருக்கின்ற அனைத்துத் தொகுதிகளிலும், நம் உதயசூரியன் உதித்தாக வேண்டும். இந்த எழும்பூர் தொகுதியில் அந்த வெற்றியைத் தொடங்க வேண்டும். எழும்பூர் எப்போதும் தி.மு.க.-வின் கோட்டை என்பதை மீண்டும் நாம் நிரூபித்தாக வேண்டும்.

தலைவர் நமக்கு கொடுத்திருக்கின்ற இலக்கு 200 தொகுதி. நம் மக்களின் எழுச்சி, கழகத்தினரின் எழுச்சியைப் பார்க்கும்போது அடுத்த 6 மாதங்கள் மக்களை சந்தித்துப் பிரச்சாரம் செய்தோம் என்றால், 200 தொகுதிகள் அல்ல, 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நாம் வெற்றி பெறுவது உறுதி. அந்த கணக்கை எழும்பூரில் இருந்து தொடங்க வேண்டும். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு. அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரங்கநாதன், ரவிச்சந்திரன், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, பரிதி இளம்சுருதி, கவிஞர் நன்மாறன், வழக்கறிஞர் சந்துரு, வரதன், ஷேக் அப்துல்லா, உமாகாந்த், தொகுதிப் பார்வையாளர் நரேந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், புனிதவதி எத்திராசன், தேவ ஜவகர், மகாதேவன், ஆசாத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மகேஷ்குமார், கே.எஸ்.எம்.நாதன், விஜயகுமார், பகுதி கழகச் செயலாளர்கள் வி.சுதாகர், சோ.வேலு, முரளி, ராஜசேகர், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, ஐ.சி.எஃப்.முரளிதரன், நாகராஜன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், வே.வாசு, கூ.பி.ஜெயின், மாநகராட்சியின் மண்டலக் குழு தலைவர்கள் மூர்த்தி, ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் வினோத், தனசேகர், பாலமுருகன், ஜெகதீஷ், சங்கர் நானா, ஜி.ஜே.பிரபு, மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், வட்டக்கழகச் செயலாளர்கள் விஜயகுமார், பாபு, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் பாலாஜி, விஜயகுமார் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.